# மாணவர்களின் ஈடுபாடு மற்றும் கல்விச் செயலாற்றுகைக்கு இடையிலான தொடர்பு: தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி கல்விப்பொதுத் தராதர சாதாரணதர மாணவர்களை மையமாகக் கொண்ட ஆய்வு

**துஷாந்தினி, A., கமலக்குமாரி, க.**
பொருளியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thusanthinithusa79@gmail.com

*கல்வியானது மனித மூலதனத்தை பெருக்குவதோடு வருமான சமத்துவமின்மையை குறைத்து பொருளாதாரத்தை மேம்படுத்துவதனால் இலங்கையும் கல்வியில் கவனத்தை செலுத்தி இலவசக்கல்வியை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து வழங்கி வருகின்றது. பொருளாதாரத்தை மேம்படுத்த கல்வியின் மீதான மாணவர்களின் ஈடுபாடு என்பது முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது. மீள்குடியேற்ற பகுதியில் அமைந்துள்ள தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம் (2022) மாணவர் களின் ஈடுபாடு குறைவடைந்து கல்விநிலை வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது என்பதனை ஆய்வுப்பிரச்சினையாக கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது மாணவர்களின் ஈடுபாட்டுக்கும் கல்விச் செயலாற்றுகைக்கும் இடையிலான பொருண்மை யான தொடர்பினை கண்டறிவதோடு மாணவர்களின் ஈடுபாட்டினுள் உள்ளடங்கும் காரணிகளினை இனங்கண்டு மாணவர்களின் ஈடுபாட்டின் அளவை மதிப்பிடுவதனை நோக்கமாகக்கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம் (2022)இல் கல்வி பயின்ற 167 மாணவர்களில் 120 மாணவர்கள் எழுமாற்றுஅடிப்படையில் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டனர். முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம்நிலைத்தரவுகள் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன் விபரணப்பகுப்பாய்வு, இணைவுக்குணகப் பகுப்பாய்வு, காரணிப்பகுப்பாய்வு பயன்படுத்தப் பட்டதோடு SPPS(Version 20) மற்றும் EXCEL ஆகிய கணினி மென்பொருட்கள் பயன் படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. மாணவர்களின் அறிவுசார்ந்த ஈடுபாட்டிற்கும் கல்விச்செயலாற்றுகைக்கும் இடையில் பொருண்மையான நேரான தொடர்பு கண்டு பிடிக்கப்பட்டது. மற்றும் நடத்தைசார்ந்த ஈடுபாட்டுக்கும் கல்விச் செயலாற்றுகைக்கும் இடையில் பொருண்மையான நேரான தொடர்பு கண்டுபிடிக்கப்பட்டது மற்றும் மாணவர் களின் உணர்ச்சிசார்ந்த ஈடுபாட்டுக்கும் கல்விச் செயலாற்றுகைக்குமிடையில் பொருண்மை யான தொடர்பில்லை என்பது இணைவுகுணகப்பகுப்பாய்வு, காரணிபகுப்பாய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. மாணவர்களின் ஈடுபாட்டினை அதிகரிப்பதற்கான செயற்பாடு களை மேற்கொள்வதன் மூலம் கல்விச் செயலாற்றுகையை மேம்படுத்தல் பரிந்துரையாக முன்வைக்கப்பட்டது.*

**திறவுச்சொற்கள்:** அறிவுசார்ந்த ஈடுபாடு, உணர்ச்சிசார்ந்த ஈடுபாடு, நடத்தைசார்ந்த ஈடுபாடு, கல்விச்செயலாற்றுகை, காரணிபகுப்பாய்வு